யுடன் பேச்சு நடத்தியதின் விளைவாக தமிழக விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்காக கடன் வழங்க உலக வங்கி முன் வந்திருப்பதாய்க் கூறப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்ய தமிழ்நாடு அரசின் சார்பில் நிதித்துறை காரியதரிசி, நிலநீர் இயக்குநர், விவசாய இணை இயக்குநர் (பொறியியல் துறை) ஆகியோர் வாஷிங்டனுக்கு 1971 ஏப்ரல்-மே திங்களில் சென்று பேச்சு வார்த்தை நடத்தி வந்தனர். தமிழ்நாடு நிலவள வங்கியின் சார்பில் அதன் தலைவர் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டார்.

(இ) அவையின் முன் உடுக்குறியிட்ட வினா எண் : 32 பிரிவு (அ) & (இ) க்கும் உடுக்குறியிட்ட வினா எண் 138 பிரிவு (இ) க்கும் விடையாக 30—3—1972 தேதியன்று வைக்கப்பட்ட அறிக்கையைக் காண்க.

Co-operative Modern Rice Mill at Talayuthu.

* 65 Q.—THIRU AYYANAN AMBALAM (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether it is a fact that the Co-operative Modern Rice Mill at Talayuthu, Tirunelveli district, has not commenced functioning for more than eighteen months after inauguration;

(*b*) if so, the reason thereof; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter ?

கூட்டுறவு நவீன அரிசி ஆலை, தாழையூத்து

திரு. அய்யணன் அம்பலம் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டம், தாழையூத்தில் உள்ள கூட்டுறவு நவீன அரிசி ஆலை, அது தொடங்கப்பட்டு பதினெட்டு திங்களுக்கு மேலாகியுங்கூடச் செயல்படத் தொடங்கவில்லை, யென்பது உண்மையா ?

1972 ஆகஸ்ட் 18]

(இ) ஆம் எனில், அதன் காரணம் யாது ?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) திருநெல்வேலி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் தாழையூத்தில் நிறுவப்பட்ட நவீன அரிசி ஆலை 1970, ஜூனில் பச்சரிசி அரைப்பதற்காக முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது. அரிசியைப் புழுக்குகிற சாதனம் அமைப்பது உட்பட, இந்த ஆலை அமைப்புப்பணி அண்மையில் தான் முடிவு பெற்றது. புழுங்கல் அரிசி தயாரிப்பதற்கான இறுதிச் சோதனை 1972 ஜனவரி 7 முதல் 9 வரை மேற்கொள்ளப்பட்டது.

(இ) அரிசி புழுக்கும் சாதனத்தை வழங்குவதிலும், அமைப்பதிலும் திரு. கெமெக் எஞ்சினியர்ஸ் நிறுவனம் காலதாமதம் செய்ததுதான் இந்த ஆலைத்திட்டம் முடிவு பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாகும்.

(உ) முறையான தயாரிப்பை மேற்கொள்ள இந்த ஆலை தற்போது ஆயத்தமாக உள்ளது. இந்த ஆலை தனது உயர்ந்தளவு உற்பத்தித் திறனைப் பெறும் அளவுக்கு இயங்குவது இயலும் பொருட்டு, நெல்லைக் கொள்முதல் செய்யுமாறு சங்கத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே எத்தனை நவீன அரிசி ஆலைகள் இருக்கின்றன? எவ்வளவு செயல்படுகின்றன ? எவ்வளவு லாபம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : எண்ணிக்கை மொத்தம் 13. அதில் 5, 6 செயல்படுகின்றன. லாப, நஷ்டம் என்று தனியாகக் கணக்குப் பார்க்கிறபொழுது, 13-ம் நட்டத்தில் தான் நடைபெறுகின்றன.

திரு. அய்யணன் அம்பலம் : குறிப்பாக, மதுரை மாவட்டத்தில், வடக்கு தாலுகாவில் ஒரு அரிசி ஆலை அமைக்கப்பட்டு அது செயல்படுகிறது இல்லையா ? அதன் வரவு செலவுத் திட்டம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்த 13 அரிசி ஆலைகளும் மிக நல்ல முறையில் இருக்கின்றன, செயல்

படத் தக்க நிலையில் இருக்கின்றன. ஆனால், செயல்படுகிறதா என்று கேட்பதில் அர்த்தம் இரண்டு. ஒன்று, அது ஓடுகின்றதா என்பது. நன்றாக ஓடுகிறது. ஆனால், செயல்படுகின்றதா என்றால், அதாவது அரசு நெல் வாங்கி அரிசி உற்பத்தி நடக்கிறதா என்றால், அவ்வளவு லாபமாக இல்லை.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, நான் கேட்பது மதுரை வடக்கில் ஒரு சாலையில் " நவீன அரிசி ஆலை" என்று ஒரு ஜீப் ஓடுகிறது. அங்கே எந்த விதமான அரிசி உற்பத்தியாகாமல் இருக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அது குறிப்பாக, செயல்படக்கூடிய நிலையில், ஓடக் கூடிய நிலையில் இருந்தாலும் அது இப்பொழுது நல்ல நிலையில் லாபகரமாக இல்லை.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : 5, 6 ஆலைகள் மட்டும் ஓடுகின்றனவா. ஒப்புக்கு ஓடுகின்றனவா என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கெனவே பதில் சொன்னேன். எல்லா ஆலைகளும் நன்றாக ஓடக் கூடியவை. அதற்கு ஏற்கெனவே அரசு கொள்கை அளவில் அறிவிப்பு கொடுத்திருக்கிறது. 28—1—1972-ம் நாள் சட்டப் பேரவையில் அறிவிப்பு இருக்கின்றது. அதன்படி நவீன அரிசி ஆலைகளை எடுத்து நடத்தும் செயல் குறிப்பு ஒன்று இருக்கிறது, எடுத்து நடத்தினால் நன்றாக நடக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கின்றது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : உணவு அமைச்சர் விளக்கம் தருவாரா ?

Boarding House for the Students Belonging to Backward Classes in Kattanur.

* 66. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether any representation has been made to the Government for the construction of a Boarding House for the students